வெள்ளிக்கிழமை, 1969 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 91 முதல் 98 வரையில் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனைக் கட்டடம்.

*99 **வினா—திருமதி வி. ப. பழனியம்மாள்:** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரில் உள்ள அரசாங்க மருத்துவ மனையை விஸ்தரிக்கும் அல்லது புதிதாகக் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) செயற் குறிப்பிற்கு அரசினர் ஒப்புதல் ஆணை பெற்றபின், நிதி நிலைமையைப்பொறுத்து இவ்வேலை துவங்கப்படும்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, உடுமலைப் பேட்டை மருத்துவ மனை புதிதாகக் கட்டப்படுமா அல்லது இருப்பதையே பழுதுபார்க்கப்படுமா? இந்த ஆண்டே அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அங்கே ஏற்கெனவே மருத்துவ மனை இருக்கிறது. மேலும் அதை விஸ்தரிக்கச் செய்வதற்குத்தான் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. நிதிநிலைமையைப் பார்த்து அதற்கேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஹொகனக்கலை சுற்றுலா மையமாக்கல்.

*100 **வினா.—திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி ஜில்லாவில் ஹொகனக்கலை யாத்திரிகை ஸ்தலமாக (Tourist Centre) அமைக்க, அரசாங்கம் ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : ஏற்கெனவே இது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இப்பொழுது இல்லை என்று சொல்லக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு இதுபற்றிய செயற் குறிப்பு இல்லை இதுபற்றிப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதை ஏற்படுத்த அரசாங்கம் பரிசிலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பரிசிலிக்கலாம்.

Marine Diesel Engine Factory at Madras.

*101 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government has any proposals to start a Marine Diesel Engine Factory in Madras with Japanese collaboration; and

(*b*) the stage at which the proposals are at present?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்திய அரசின் தொழில் நிறுவனமாகிய ஹௌராவிலுள்ள திரு. மத்திய மினளக் கார்ப்பரேஷன், ஜப்பான் நாட்டு ஓசாகாவைச் சார்ந்த திரு. யென்மார் டீசல் என்ஜின் நிறுவனத்தின் உடன் உழைப்புடன் தமிழ் நாட்டிலுள்ள எண்ணூரில், மீன் பிடி படகுகளுக்கான 30-66 குதிரைத் திறனுடைய மரீன் டீசல் பொறிகளை, ஆண்டொன்றுக்கு 1,000 பொறிகள் வீதம் செய்யும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ உத்தேசித்துள்ளது.

(ஆ) இந்த நிறுவனம் தொழில் உரிமம் வேண்டி இந்திய அரசிடம் மனுச் செய்துள்ளது. அது இந்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE : When is the factory likely to take a concrete shape? Are the Government aware of the fact that a number of diesel engines which were previously functioning are not functioning now and only those foreign engines fitted to some of the boats are working and otherwise a number of them get stranded? In view of these facts, will the Government let us know when exactly this factory is going to take a concrete shape; and in case there is any delay, will the Government take up the matter with the Central Government and explain to them the urgency for this factory?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டு அரசின் சார்பில் இது சம்பந்தமாக மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம், கடைசியாகக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்பதுபற்றி பரிசீலிக்கும்போது மத்திய அமைச்சர் அங்குள்ள இலாக்காவில் சில புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று கேட்டு